# பிரான்ட் ∴பினான்ஸினால் இலங்கையர்கள் அதிகளவு விரும்பும் பிஸ்கட் வர்த்தக நாமமாக மலிபன் தெரிவு

இலங்கையில் 60 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் மலிபன் பிஸ்கட் மெனுபக்ஷரிஸ், இலங்கையர்களின் மனங்கவர்ந்த நாமமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. LMD இன் வருடாந்த வர்த்தக நாம விருதுகள் 2018இன் தரப்படுத்தலை மேலும் உறுதி செய்யும் வகையில் பிரான்ட் ∴பினான்ஸ் லங்காவினால் நாட்டில் காணப்படும் மிகவும் மனம் விரும்பிய 125 வர்த்தக நாமங்களில் ஒன்றாக மீண்டும் மலிபனை மூன்றாவது தடவையாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பிரான்ட் ∴பினான்ஸ் மூலமாக சகல துறைகளையும் பிரதேசங்களையும் சேர்ந்த 3500 க்கும் அதிகமான வர்த்தக நாமங்கள் தரப்படுத்தப்படுகின்றன. பெறுபேறுகள் திரட்டப்பட்டு, த பேங்கர் போன்ற பங்காளர்களுடன் கைகோர்த்து ஊடகங்களில் வெளியிடப்படுவதுடன், இதனூடாக வர்த்தக நாமங்களை பெறுமதி வாய்ந்த வர்த்தக சொத்துக்களாக விழிப்புணர்வை மேம்படுத்துவது, அவற்றில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியது மற்றும் நிர்வகிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் போன்றன உணர்த்தப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் பிரான்ட் ∴பினான்ஸ் லங்கா அலுவலகத்தினால் LMD சார்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், நாட்டில் காணப்படும் அதிகளவு நேசிக்கப்படும் நுகர்வோர் வர்த்தக நாமத்துக்கான தரப்படுத்தல் முன்னெடுக்கப்படுகின்றது.

***ஒப்பற்ற தரம் மற்றும் சுவை ஆகியவற்றை எப்போதும் வழங்குவது எனும் எமது ஸ்தாபகர்களின் உறுதி மொழியை நாம் நிறைவேற்றுகிறோம் - முகாமைத்துவ பணிப்பாளர் குமுதிகா பெர்னான்டோ.***

இந்த கௌரவிப்பு தொடர்பில் மலிபன் பிஸ்கட்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் குமுதிகா பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், ''எமது ஸ்தாபகர் ஏ.ஜி.ஹின்னிஅப்புஹாமி அவர்களால் கொட்டாஞ்சேனையில் நிறுவப்பட்ட வெதுப்பகத்தில் எமது எமது தரமான தயாரிப்புகளின் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பமாகியிருந்தன. பல ஆண்டுகளாக தொடர்ந்திருந்த எமது ஆய்வு மற்றும் அபிவிருத்தி அணியின் அர்ப்பணிப்புடன், எம்மால் தொடர்ச்சியாக புத்தாக்கமான மற்றும் புரட்சிகரமான தயாரிப்புகளை எமது பரந்தளவு வாடிக்கையாளர்களின் சுவை நரம்புகளுக்கு விருந்தளிக்கக்கூடிய வகையில் அமைந்திருந்தன. இலங்கையில் காணப்படும் ஏனைய பிஸ்கட் வர்த்தக நாமங்களை விட உயர்ந்த நிலையில் மலிபன் வர்த்தக நாமத்தை தரமுயர்த்தியுள்ளதனூடாக, எமது நுகர்வோர் எமது ஸ்தாபகரின் ஒப்பற்ற தரம் மற்றும் சுவையை வழங்குவது எனும் கொள்கையுடன் நாம் தற்போதும் திகழ்வதை உறுதி செய்துள்ளனர். இதை எமது தற்போதைய தலைவர் ரத்னபால சமரவீர முன்னெடுத்து வருகிறார்'' என்றார்.

***வெற்றிகரமான செயற்பாட்டில் தொடர்ச்சியான புத்தாக்கங்களினூடாக வாடிக்கையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்வது – ரவி ஜயவர்தன குழும பிரதம நிறைவேற்று அதிகாரி***

மலிபன் பிஸ்கட்ஸ் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதம நிறைவேற்று அதிகாரி ரவி ஜயவர்தன கருத்துத் தெரிவிக்கையில், ''பாரம்பரிய வர்த்தக நாமம் எனும் வகையில் மலிபன் சகல வயதையும் சேர்ந்த நுகர்வோரின் தேவைகளை புரிந்து கொண்டு, தொடர்ச்சியாக தனது உற்பத்திகளில் மேம்படுத்தல்களை முன்னெடுத்த வண்ணமுள்ளதுடன், புத்தாக்கங்களினூடாக புதுமையான தயாரிப்புகளையும் அறிமுகம் செய்துள்ளது. 2018 இல் நாம் அறிமுகம் செய்திருந்த புதிய தயாரிப்புகளில் கோப்பி சுவையிலமைந்த *Maliban Real Temptation Coffee* ஐ அறிமுகம் செய்திருந்ததுடன், *Maliban Golden Creamy Puff* மற்றும் *Maliban Faluda Marie* போன்றன பதின்ம வயதைச் சேர்ந்தவர்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. 2017இல் *Maliban ABC Learnies* அறிமுகம் செய்யப்பட்டிருந்ததுடன், குழந்தைகள் மத்தியில் இது மிகவும் வரவேற்பைப் பெற்றுள்ளது.'' என்றார்.

சகல வயதைச் சேர்ந்தவர்களுக்கும் தரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்குவதற்கு தம்மை அர்ப்பணித்துள்ள மலிபன், தனது தர முகாமைத்துவ கட்டமைப்பை தொடர்ச்சியாக மேம்படுத்துவதுடன், மூலோபாய வழிகாட்டலை ஊக்குவித்த வண்ணமுள்ளது. இவற்றினூடாக நிறுவனத்துக்கு தரத்தை எய்த முடிந்துள்ளதுடன், சர்வதேச உணவு ஒழுங்குபடுத்தல் தரங்களை நிவர்த்தி செய்ய முடிந்தது. மேலும், மலிபன் மூலமாக ஊழியர்களில் அதிகளவு

முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனூடாக வினைத்திறன் வாய்ந்த பயிற்சிகள் மற்றும் புத்தாக்கமான வழிகாட்டல்கள் போன்றன வழங்கப்படுகின்றன.

35 க்கும் அதிகமான நாடுகளுக்கு சென்றடைந்துள்ளதுடன், 25 மில்லியனுக்கு அதிகமான பிஸ்கட் பொதிகளை ஒவ்வொரு மாதமும் உற்பத்தி செய்கின்றது. இதற்காக மலிபன் தன்வசம் நவீன வசதிகள் படைத்த உற்பத்தி பகுதியை கொண்டுள்ளதுடன், கடுமையான தூய்மை மற்றும் தர சூழல்களை பேணி வருகிறது. ISO 9001, ISO 14001, ISO 22000 மற்றும் OHSAS 18001 சான்றுகளை பெற்ற நிறுவனம் என்பதுடன், இலங்கையின் பெருமைக்குரிய தேசிய தர விருதுகளை ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சுவீகரித்துள்ளது. சர்வதேச கௌரவிப்புகளான ஆசிய பசுபிக் தர நிறுவனத்தின் (APQO) 'Global Performance Excellence Awards' (GPEA) விருது பாரிய உற்பத்தியாளர் பிரிவில் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. பெல்ஜியத்தைச் சேர்ந்த சர்வதேச சுவை மற்றும் தர கல்வியகத்தின் (ITQI) இரண்டு நட்சத்திர 'The Superior Taste Award' விருதையும் பெற்றுள்ளது. பிரத்தியேகமான சமையல்கலை நிபுணர்களின் ஒன்றிணைவான World Master Chefs Society (WMCS) கௌரவிப்பு மற்றும் Association de la Sommelier International (ASI) கௌரவிப்பையும் பெற்றுள்ளது. சுவை மற்றும் தரத்துக்காக இலங்கையின் சர்வதேச விருதை பெற்ற ஒரே உணவு வர்த்தக நாமமாக மலிபன் திகழ்கிறது.